# இஸ்லாமிய வாழ்வியல் பொருளாதார அடிப்படைகள்

## இஸ்லாமியப் பொருளாதாரத்தின் சில அடிப்படைகள்:

*1* இஸ்லாம் பொருட்செல்வம் மற்றும் செல்வச் செழிப்பினை ஆட்சிக்கான தகுதியாகக் கருதவுமில்லை, இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு பல்வேறு சமுதாயங்களில் ஒரு செல்வந்தர்மட்டுமே ஆட்சியாளராகும் தகுதியைப் பெற்றிருந்ததுபோன்று ஆட்சியை ஒப்படைக்கவுமில்லை. இதன் பொருள் செல்வச்செழிப்புடைய ஒருவர் ஆட்சியாளர் அல்லது ஆளுநராக ஆகமுடியாது என்பதல்ல, மாறாக, செல்வச்செழிப்பு மட்டுமே ஆட்சியாளராகும் தகுதியாகக் கருப்படும் என்ற விதிமுறை அல்ல.

*2* இஸ்லாம் முஸ்லிம்களுக்கு பொருளீட்டுவதற்கான பல்வேறு ஆதாரங்களைப்பற்றி எடுத்துரைத்துள்ளது, அவை தொழில் துறையாயினும், வியாபாரமாயினும், வேட்டை அல்லது கனிமங்கள் மற்றும் பெட்ரோல் போன்ற இயற்கை வளங்களாயினும் சரியே. அல்லாஹ் தஆலா கூறு கின்றான்:

وَأَنزَلْنَا ٱلْحَدِيدَ فِيهِ بَأْسٌ شَدِيدٌ وَمَنَٰفِعُ لِلنَّاسِ ﴿٢٥﴾ (الحديد:25)

பொருள்: மேலும், இரும்பையும் இறக்கினோம், அதில் பெரும் வலிமை இருக்கின்றது, மக்களுக்குப் பயன்களும் இருக்கின்றன (அல் ஹதீத்:25)

மற்றொரு இடத்தில் அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

أَفَرَءَيْتُم مَّا تَحْرُثُونَ ﴿٦٣﴾ ءَأَنتُمْ تَزْرَعُونَهُۥٓ أَمْ نَحْنُ ٱلزَّٰرِعُونَ ﴿٦٤﴾ (الواقعة:63ـ64)

பொருள்: நீங்கள் விதைக்கின்ற இந்த விதையைப்பற்றி எப்போதாவது சிந்தித்ததுண்டா? இதன் மூலம் பயிரை நீங்களே விளைவிக்கின்றீர்களா அல்லது நாம் விளைவிக்கின்றோமா?

இவாவாறே, அல்லாஹ் தஅலா மேலும் கூறுகின்றான்:

وَهُوَ ٱلَّذِى سَخَّرَ ٱلْبَحْرَ لِتَأْكُلُوا۟ مِنْهُ لَحْمًا طَرِيًّا وَتَسْتَخْرِجُوا۟ مِنْهُ حِلْيَةً تَلْبَسُونَهَا وَتَرَى
ٱلْفُلْكَ مَوَاخِرَ فِيهِ وَلِتَبْتَغُوا۟ مِن فَضْلِهِۦ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ ﴿١٤﴾ (النحل:14)

பொருள்: அவனே (உங்களுக்காக) கடலை வசப்படுத்தித் தந்துள்ளான், அதிலிருந்து நீங்கள் புத்தம்புதிய மாமிசத்தைப் புசிக்கவேண்டும் என்பதற்காகவும், நீங்கள் அணிகின்ற அழகுப்பொருட்களை அதி

லிருந்து வெளிக் கொணர்ந்திடவேண்டும் என்பதற்காகவும். மேலும், கப்பல் கடலைப் பிளந்துகொண்டு செல்வதையும் நீர் காண்கின்றீர். மேலும், உங்கள் இறைவனின் அருளை நீங்கள் தேடுவதற்காகவும், அவனுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாய் நீங்கள் திகழ்வதற்காக வுமே இவையெல்லாம் இருக்கின்றன (அந்நஹ்ல்:14)

3 இஸ்லாம் பொதுத்துறைச் சொத்துக்கள் மற்றும் தனிநபர் சொத்துக் கள் என்ற அமைப்பினையே உண்டாக்கியிருக்கின்றது. மேலும், அத னைப் பற்றிக்கூறும்போது, சில விஷயங்கள் எப்படிப்பட்டவை என் றால் அவை சிலருடைய தனிச்சொத்தாக இருப்பது அனுமதிக்கத் தக்கவையல்ல, மாறாக, அவை பொதுமக்களுக்கான சொத்தாகவே இருக்கவேண்டும் என்ற நிலை உள்ளது. இவையெல்லாம் இஸ்லா மியச் சமுதாயத்தினரில் எவருமே இவற்றின் தேவையற்றவர்களாக இருக்கவே முடியாது, இவை காலத்திற்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப மாறிக்கொண்டே இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் மூன்று விஷ யங்களைப்பற்றிக் கூறியுள்ளார்கள், அவையாவன: தண்ணீர், புற் பூண்டுகள் மற்றும் நெருப்பு, ஏனெனில், இவை இஸ்லாத்தின் ஆரம் பக் காலக்கட்டத்தில் பாலைவன வாழ்க்கையில் பரவலாகவே காணக் கிடைத்தன. இந்த மூன்று விஷயங்களைப் போன்றே, இதனைப் போன்ற அம்சங்களையுடைய வேறு பொருட்களையும் கண்டறிந்து செயல்படலாம். உதாரணமாக, ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர் கள் ஈராக்கின் வெற்றியின் மூலம் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்புகளை பொதுச்சொத்துக்களாக அறிவித்தார்கள், இவ்வாறே, க்ஹலீஃபா உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் அவர்கள் அவருக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் கையகப்படுத்திக்கொண்ட அனைத்துப் பொருட்களையும் அதன் உரிமையாளர்களுக்குத் திருப்பி அளித்து விட்டார்கள், உதாரணமாக, ஹிபாவாக (மானியமாக) அளிக்கப்பட் டவை. மேலும், அவர்கள் அவற்றைப் பொதுமக்கள் அனைவரும் பயனடையவேண்டும் என்பதற்காகவும், அவை சில மனிதர்களுக்கு மட்டும் என்று வரையறைக்கப்படுத்தப்படக்கூடாது என்பதற்காகவும் பொதுத்துறைச் சொத்துக்க மாற்றியமைத்து விட்டார்கள்

இஸ்லாம் தனிநபர் சொத்துக்களை அங்கீகரிக்கின்றது மற்றும் அதனை ஊக்குவிக்கவும் செய்கின்றது. அதன் உரிமையாளர்களுக்காக அதற்குப் பாதுகாப்பும் அளிக்கின்றது. இது மனித இயல்புகளுக்கு முற்றுலும் ஏற்றதாகும். இஸ்லாம் தனிநபர் சொத்துக்கள் அனுமதிக் கப்பட்ட, ஹலாலான முறைகளில் பெறப்படவேண்டும் என்ற நிபந் தனையை விதித்துள்ளது, அத்துடன் அதிலிருந்து ஜ்ஸகாத் செலுத்த வேண்டும் என்பதையும் கட்டாயக் கடமையாக ஆக்கியுள்ளது. இவ் விஷயத்தில் இஸ்லாத்தின் குறிக்கோள் என்னவேன்றால், சொத்துக்

களும் செல்வமும் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும், தனிநபர் ஆதிக்கத்திற்கு ஆளாகிவிடக்கூடாது என்பதாகும். இதனை, இஸ்லாமிய அமைப்பின் ஆதாரப்பூர்வமான கடமையாகக் கருதியுள்ளதோடு அதனுடைய பலன் அனைத்துச் சமுதாயங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, சொத்துக்கள் தவறானவர்களுடைய கையில் சென்றடைந்துவிடக் கூடாது என்பதாகும். ஆனால், சமுதாயத்தின் நலன்களை விரும்பிப் பேணிப்பாதுகாக்கும் பண்புடைய ஒருவரிடம் இதற்கான பொறுப்பு மற்றும் நிர்வாகம் இருக்குமானால், தவறான வழியில் செல்பவர்களும் சீரான வழிமுறையின்பால் திரும்பி வருவார்கள் என்பதாகும்.

4 மிகப்பெரிய அளவிலான சொத்துக்கள் யாவும் சிலருடைய கைகளில் மட்டும் சென்றடைவதையும், அவர்கள் அதற்கான ஜ்ஸகாத் செலுத்தாமலேயே இருப்பதையும் இஸ்லாம் அனுமதிப்பதில்லை, ஏனெனில், இதன் காரணமாக, செல்வந்தர்கள் மற்றும் ஏழைகளுக்கிடையே மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டுவிடுகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின் றான்:

كَيۡ لَا يَكُونَ دُولَةَۢ بَيۡنَ ٱلۡأَغۡنِيَآءِ مِنكُمۡۚ ۝٧ (الحشر:7)

பொருள்: ஏனெனில், உங்களிலுள்ள செல்வந்தர்களிடையே மட்டும் சுற்றிக்கொண்டிருக்கக்கூடாது என்பதற்காக (அல் ஹஷ்ர்:7)

5 இஸ்லாம் மக்களுக்கிடையே ஏற்றத்தாழவுகள் இருப்பதை அனுமதிக்கின்றது மற்றும் இந்த ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படை அவர்களுடைய கடின உழைப்பு, இன்னல்களை எதிர்கொள்ளுதல், அவர்களுடைய செயல்பாடுகள் மற்றும் தகுதிகள் மட்டுமே என்று இருக்க வேண்டும் என்று கருதுகின்றது, அல்லாஹ் தஅலா மேலும் கூறுகின்றான்:

وَٱللَّهُ فَضَّلَ بَعۡضَكُمۡ عَلَىٰ بَعۡضٖ فِي ٱلرِّزۡقِۚ ۝٧١ (النحل:71)

பொருள்: மேலும், அல்லாஹ் உங்களில் சிலருக்கு வேறு சிலரைவிட வாழ்க்கை வசதியில் சிறப்பு அளித்துள்ளான், (அந்நஹ்ல்:71)

6 அல்லாஹ் தஆலா செல்வந்தர்களுடைய செல்வத்தில் ஏழை எளியவர்களுக்கான பங்கினையும் நிர்ணயித்துள்ளான். அல்லாஹ் தஅலா கூறுகின் றான்:

وَفِىٓ أَمۡوَٰلِهِمۡ حَقٌّ لِّلسَّآئِلِ وَٱلۡمَحۡرُومِ ﴿١٩﴾ (الذاريات:19)

*பொருள்: மேலும், அவர்களுடைய செல்வங்களில் யாசிப்பவருக்கும், இல்லாதவர்களுக்கும் உரிமை இருக்கின்றது (அத்ஜ்ஜாரியாத்:19)*

7 *ஏழை எளியவர்கள்மீது செல்வந்தர்கள் கொடுமைகள் மற்றும் அத்து மீறல்களைச் செய்தவதிலிருந்து தடுக்கவேண்டும் என்று இஸ்லாம் முஸ்லிம் ஆட்சியாளர்கள்மீது கட்டாயமாக ஆக்கியுள்ளது. ஆகவே தான், ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் ஜ்ஸகாத் கொடுக்க மறுப்பவர் ளோடு போர் தொடுத்தார்கள், ஏனெனில், இதன்மூலம் இஸ்லா மியச் சட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு ஏழைகள்மீது அநீதியிழைக்கப் பட்டு அர்களுடைய உரிமைகளும் மறுக்கப்படுகின்றன.*

* * *